


தென்சென்னை மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் ஜம்புலிங்கம் 18 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திமுக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர்ராஜா, பகுதிச் செயலாளர்கள் கண்ணன், ராஜா மற்றும் வாசுகிபாண்டியன் தங்கராஜ், அஜந்தா ரவி, மகேந்திரன், வட்டச் செயலாளர்கள் அன்பழகன், பழனி, செழியன், கோவிந்தராஜ், கதிரேசன் உள்பட நூற்றுக்கணக்கானோர் ஊர்வலமாய் சென்று அஞ்சலி செலுத்தினர்.



தருமபுரி கலை கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு 533 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 9 இலட்சத்து 43 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் சாந்தி,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி. இன்பசேகரன்,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### வெளிப்படைத் தன்மையுடன்தான் துவரம் பருப்பும் பாமாயிலும் கொள்முதல் செய்யப்படுகிறது!

# பா.ஜ.க.வின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை,அக்.18-

தரமான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வெளிப்படைத் தன்மையுடன் கொள்முதல் செய்யப்படுகிறது என்று பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட ஆதாரமற்றக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்து

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

அவரது அறிக்கை வருமாறு:

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் மற்றும் விநியோகம் பற்றி விரிவாக அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதற்கு பின் கோயம்புத்தூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளித்து மீண்டும் ஓர் அறிக்கை வெளியிட்டேன். திருமதி. வானதி சீனிவாசன் தன் அறிக்கையில் துவரம் பருப்பின் வெளிச்சந்தை விலை ரூ. 200/- என்று குறிப்பிட்டிருந்தார். அதே கட்சியைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் அவர் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததைக் கூட அறியாமல் எவ்வித ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டைத் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வெளிச்சந்தையில் பருப்பு விலை என்ன என்பதைக் கூட அறியாமல் அல்லது அறிந்தும் உள்நோக்கத்துடன் வாய் புளித்ததோ

மாங்காய் புளித்ததோ என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். ஒரு கடையில் (02CB047NC - அன்பழகன் நகர் - 2) பருப்பு இல்லை என்று இன்னொரு குற்றச்சாட்டையும் ஆதாரமில்லாமல் தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்ட கடையில் 1319 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கடைக்கு அக்டோபர் 24 மாதத்திற்கு ஏற்கனவே இருப்பில் இருந்த 53 கிலோவுடன் 1119 கிலோ துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு

800 கிலோ துவரம் பருப்பு நகர்வு செய்யப்பட்டு இது வரை 605 கிலோ துவரம் பருப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அது போக 248 கிலோ துவரம் பருப்பு இந்தக் கடையில் இன்று இருப்புள்ளது.

இன்று (17.10.2024) கூட 39 குடும்ப அட்டைதாரர்கள் துவரம் பருப்பைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எவ்வாறு கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை அறியாதவர்களுக்கும் பா.ஜ.க செய்தித் தொடர்பாளருக்கும் அதன் விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஒளிவு மறைவற்ற திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன் படி ஒரு ஆங்கில நாளிதழிலும், தமிழ் நாளிதழிலும் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதலுக்கு விலைப்புள்ளிகள் கோரி விளம்பரம் செய்யப்படும். அதோடு இணைய வழியிலும் (e-tender) விளம்பரம் செய்யப்படுகிறது. இந்தியா முழுதும் செய்யப்படும் விளம்பரங்களைப் பார்த்துச் சமர்பிக்கப்படும் விலைப்புள்ளிகள் மற்றும் மாதிரிப் பொருள்களை (Sample) ஒப்பந்தக் கூராய்வுக் குழு (Tender Scrutiny Committee) ஆய்வு செய்யப்பட்டு, தரம் மற்றும் தகுதிகள் உள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளிகளைக் குழுமத் துணைக் குழு (Board Sub Committee) ஆய்வு செய்து குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதிப் பட்டியலை முடிவு செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.



துணைக் குழுவில் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் மற்றும் துணைச் செயலாளர் (பட்ஜெட்) ஆகிய மூன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

துணைக்குழு ஒப்பந்ததாரர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி விலைக்குறைப்பு செய்து முடிவு எடுத்ததைப் பதினொன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழு பரிசீலனை செய்து இறுதி முடிவு எடுத்துக் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

மெஸர்ஸ் சி.ப்பி ஃபுட்ஸ், விருதுநகர் என்ற நிறுவனம் கனடா மஞ்சள் பருப்பினைக் கொள்முதல் செய்யக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். டபிள்யு. ப்பி.2377/2023 யின் தீர்ப்புரையில் பருப்பு கொள்முதல் செய்யும்போது எந்த பருப்பு விலை குறைவாக உள்ளதோ அந்த பருப்பினைக் கொள்முதல் செய்வதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த மாதத்தில் (செப்டம்பர் - 2024), அனைத்துப் பருப்புகளிலும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த ஐந்து நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்ட அக்ரிகோ என்ற நிறுவனம் பேச்சு வார்த்தையிலேயே கலந்து கொள்ளவில்லை.

ஆதலால், முறைப்படி வெளிப்படைத் தன்மையுடன் முடிவெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் துறை அமைச்சரைப் பற்றியோ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனரைப் பற்றியோ குறை கூறுவதில் அர்த்தமில்லை. ஒப்பந்தப்படி உரிய காலத்தில் விநியோகம் செய்யாத நிறுவனங்கள் மீது ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளின்படி தாக்கீது அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படியிருக்க ஒரு பொறுப்புள்ள கட்சியின் செய்தித் தொடர்பாளர் எவ்வித ஆதாரமும் இல்லாமல் 100 கோடி ரூபாய் இழப்பு மற்றும் ஊழல் என்று கூறுவது

முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது. அதே போல் குறிப்பிட்ட ஒரு கடையில் பருப்பு இல்லை என்று கூறியிருப்பதும் அவரது அறியாமையைக் காட்டுகிறது.

ஆதலால் பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் தன்னுடைய ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமை ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.! முன்னிலை அமைச்சர் பி.கே. சேகர்பாபு!

# திரு.வி.க நகர் தொகுதியில் கழக முப்பெரும் விழா - பவள விழா பொதுக்கூட்டம்!

## திருச்சி சிவா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை,அக்.18-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் பவள விழா ஆண்டு முப்பெரும் விழா பொதுக்கூட்டம் நாளை 19.10.2024 சனிகிழமை மாலை பாஷ்யம் தெரு ஓட்டேரியில் நடைபெறுகிறது.

இந்த பொதுகூட்டத்திற்கு கழகதுணை அமைப்பு செயலாளர் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி தலைமையில் மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர் பாபுமுன்னிலையில் திருச்சி என்.சிவா எம்.பி. கழகக் கொள்கை பரப்பு இணைச்செயலாளர் புதுக்கோட்டை விஜயா, கழகச் செய்தி தொடர் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மேயர் பிரியா ராஜன் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, சரிதா மகேஷ் குமார், சட் ஆசாத், புனிதவது எத்திராசன், டி. லோகேஷ் ந.துலுக்கானம் லயன் பி. துளசிங்கம், எம். பெரோஸ்கான் பெரம்பூர் ஆர்.ராஜன் பெரம்பூர் ஆர். மகேஷ் கா.ராஜ் முகமது, இரா.வீரமணி, தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ், அ.புவனவதி கினார் ஆறுமுகம் வரவேற்புரையில் ஜி கிருஷ்ணகுமார் எஸ். புஷ்பராஜ் எம் சரவணன் எம்.சி. ச.அம்பத்வளவன் எம்.சி. ரமணிலோகேஷ் எம்.சி. தமிழ்செல்விசசிகுமார் எம். சி. ., பரிமளா சுரேஷ் மாருத்ரமூர்த்தி, அபோய், டீக்கா, தமீம் , பொல்லு டி.சுரேஷ் குமார், வி.கே.வெங்கடேசன், வெங்கடேசன், சசிகுமார், அ.கோவிந்தன், த.கருணாநிதி, பி.சுகுமார் வனஜாசண்முகம், அ.கருணாநிதி,

எல்.பாண்டுரங்கன், கனல்கங்கா, இ.ஜோசுவா, பா.ஜலபூஷணம், எஸ். காதர்மீரான், கே.லட்சுமிஜி, சூர்யகுமார், எப்.செபஸ்டின் எஸ்.கே.சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதிகள் வ.நாமதேவன், ஆர்.ராஜராஜன் நன்றியுரையாற்றுகின்றனர்.

# அரியலூர் மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், அக். 18 -

அரியலூர் மாவட்ட கழக ஆலோசனை கூட்டம்,கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு அரியலூர் மாவட்டத்திற்கு கழக நிகழ்ச்சி மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்திற்கு, 22ம் தேதி வருகை தரும் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பாக வரவேற்று நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடத்துவது குறித்தும், கழகத் தோழர்கள் வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல், கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும் கலந்தாலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

இதில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பீ. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்டக் கழக பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றியக் கழக செயலாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், ப.தனவேல், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. பாலு, சி.ஆர்.எம். பொய்யாமொழி,

வி.எம்.ஷாஜகான்,சுமதி கருணாநிதி, அரியலூர் தொமுச செயலாளர் பி.வி. அன்பழகன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஜெயகுமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# மாற்றமும் ஏற்றமும்!

மழை வெள்ளம் சூழ்ந்ததால் என்ன
மக்களைக் காப்பதற்கு?
தலைவர்நம் ஸ்டாலின் உள்ளார்
தளபதி வடிவம் கொண்டு!

கடைக்கோடி மக்கள் கூட
கண்ணீர் சிந்தாமல் காப்பார்
தடை - கோடி வந்த போதும்
தளராமல் வென்று தீர்ப்பார்!

தளபதி ஸ்டாலின் அன்று...
தலைவர்நம் ஸ்டாலின் இன்று!
உளமெலாம் சிலிர்க்க நாட்டை
உயர்த்திடும் தலைமை நன்று!



கவிஞர் **மு.மேத்தா**



ஜெர்மனியில் நடைபெறும் பிராங்க்பர்ட் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் தமிழ்நாடு அரசின் அரங்கை 16.10.2024 அன்று ஜெர்மனி நாட்டிற்கான இந்திய அரசின் துணைத் தூதர் மேதகு பி.எஸ்.முபாரக் திறந்து வைத்தார். நிகழ்வில், இந்திய அரசின் நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா நிறுவனத்தின் முதன்மை ஆசிரியர் குமார் விக்ரம், பொது நூலக இயக்குர் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண் இயக்குநர் முனைவர்.பொ.சங்கர் தலைமையிலான தமிழ்நாடு அரசின் குழுவினர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பதிப்பாளர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, அயன்புரத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார். உடன் சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், மாமன்ற உறுப்பினர் லதா வாசு, வட்டக் கழகச் செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் கட்டவாக்கம் ஊராட்சியில் வடகிழக்கு பருவ மழை காரணமாகமுகாமில் தங்கியிருக்கும் இருளர் இன மக்களுக்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ உணவு, நிவாரண பொருட்கள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம். ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், வட்டாட்சியர் இந்துமதி. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி காஞ்சனா கண்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் டி.சஞ்சய், காந்தி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி அஞ்சுகம் அருள், மாவட்ட பிரதிநிதி வாலாஜாபாத் என். சச்சிதாஸ் நரசிம்மன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்